**ADM COURT, SANKARANKOVIL**

**தேதி 30.04.2026**

**சி.சி.எண். 56/2024**

**எதிரி ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**அ.சா.5 மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் ஆஜராகி சத்தியபிரமாணத்தின் பேரில் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட தினமாக 1வது காலத்தில் அந்த அறிக்கையில் 27.07.2019 என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடப்பட்டுள்ளது. முதல் தகவல் அறிக்கையின் 3வது காலத்தில் காவல்நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாளாக 27.02.2015 குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பொதுவாக ஒரு வழக்கில் பதிவு செய்யப்படும் முதல் தகவல் அறிக்கையில் உள்ள நாள் மற்றும் நேரம் பற்றிய விபரம் எங்களிடமுள்ள ஆவணத்திலும் நீதிமன்றத்தில் சமர்பிக்கப்பட்ட ஆவணத்திலும் ஒன்றுபோல்தான் இருக்கும் என்றால் சரிதான். நீதிமன்றத்தால் சமர்பிக்கப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் 1வது காலத்தில் பதிவு செய்யப்பட்ட நாளாக 27.02.2015 குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். போலீசாரிடமுள்ள முதல் தகவல் அறிக்கையின் நகலில் உள்ள தேதியையும், நீதிமன்றத்தில் சமர்பிக்கப்பட்டுள்ள முதல் தகவல் அறிக்கையின் அசலில் உள்ள தேதியையும் யார் மாற்றினார்கள் என்று தெரியுமா என்றால் தெரியாது. முதல் தகவல் அறிக்கையின் 6 நகல்களிலும் பதிவு செய்யப்பட்ட தினமாக கொடுக்கப்பட்டுள்ள நாள் ஒன்றுபோல் உள்ளதா என்று நான் சரிபார்த்தேனா என்றால் அது பற்றி எனக்கு ஞாபகம் இல்லை. முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் 6 நகல்களில் தெரிவிக்கப்பட்டுள்ள பதிவு செய்யப்பட்ட தினமாக கொடுக்கப்பட்டுள்ள நாள் ஒன்றுபோல் உள்ளதா என்று சரிபார்ப்பது எனது கடமை என்றாலும் அவ்வாறு அவற்றில் வேறுபாடுகள் இருந்தால் அந்த தவறுக்கு நான்தான் பொறுப்பு என்றாலும், சரிதான். முதல் தகவல் அறிக்கையின் அசலில் உள்ள தேதியை மட்டும் நான் சரிபார்த்து அனுப்பினேன். அதன் நகலில் ஏற்பட்ட திருத்தத்தை பார்க்க தவறிவிட்டேன். திருநெல்வேலி மாவட்ட கண்காணிப்பாளரை பெறுநராக காட்டி சண்முகத்தாயால் கொடுக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ள என்னிடம் காட்டப்படும் மனுவை நான் நீதிமன்றத்தில் சமர்பித்தேனா என்றால் இல்லை. மேற்படி மனுதான்

என்னால் புகார்தாரர் அளித்த புகார் மனுவாக தெரிவிக்கப்பட்டு நீதிமன்றத்தில் சமர்பிக்கப்பட்டு நீதிமன்றத்தின் மூலம் எதிரிக்கு வழங்கப்பட்ட புகார்மனுவின் நகல் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் மேற்படி மனு நீதிமன்றத்தில் என்னால் கொடுக்கப்படவில்லை. எதிரிக்கு அந்த மனு எவ்வாறு புகார்மனுவின் நகலாக வழங்கப்பட்டது என்று எனக்கு தெரியாது. மேற்படி மனு எதிரிக்கு புகார்மனுவின் நகலாக நீதிமன்றத்தில் உள்ள அலுவலர்களால் பொய்யாக கொடுக்கப்பட்டதா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி மனு எதிரிக்கு புகார்மனுவின் நகலாக யாரால் கொடுக்கப்பட்டதாக நான் சொல்கிறேன் என்றால், எதிரிக்கு வழக்கு ஆவணங்களின் நகல் கொடுக்கும் போது பணியிலிருந்த நீதிமன்றத்தில் ஆஜரான சங்கரன்கோவில் தாலுாக காவல்நிலையத்தில் உள்ள காவலர் கவனக்குறைவாக போலீசாரிடமுள்ள வழக்கு ஆவணங்களுள் இருந்த உண்மையான புகார்மனுவைகொடுக்காமல் மேற்படி மனுவை புகார்மனுவின் நகலாக கொடுத்திருக்கலாம். மேற்படி காவலருக்குஎதிராக நடவடிக்கை எடுப்பதில் எனக்கு ஆட்சேபணை எதுவும் உள்ளதா என்றால் இல்லை. இ.த.ச பிரிவு 494 ல் உள்ள உட்கூறுகள் எனக்கு நன்கு தெரியுமா என்றால் தெரியும். இ.த.ச. பிரிவு 494 ன் கீழ் இரண்டாவது திருமணம் நடைபெற்றதற்கான ஆதரங்களோ சான்றாவணங்களோ இல்லாமல் அந்த பிரிவின் கீழ் மட்டும் தன்னிச்சையாக வழக்கு தாக்கல் செய்ய இயலாது என்றால் சரியல்ல. எனக்கு மேற்படி பிரிவின் சட்ட உட்கூறுகள் தெரியாது என்றாலும் அதனால் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. சங்கரன்கோவில் நகர காவல்நிலையத்தில் புகார்மனு அளிப்பதற்கு முன்பே 11 மாதங்களுக்கு முன்பு தன் கணவர் காளீஸ்வரியை கூட்டிக்கொண்டு சென்றதாக புகார்தாரர் புகார்மனுவில் தெரிவித்துள்ள நிலையில் இப்புகார்மனு அளிக்கப்படுவதற்கு முன்பு வேறு புகார்மனு எதுவும் புகார்தாரரால் எங்கள் காவல்நிலையத்தில் கொடுக்கப்பட்டதா என்றால் இல்லை. எதிரி வேலை செய்ததாக சொல்லப்படும் கோயம்புத்தூரில் உள்ள வெள்ளைபன்றி பண்ணைக்கு நேரில் சென்று விசாரித்தேனா என்றால் இல்லை. அ.சா.1 எனது விசாரணையின் போது அவரது கணவர் அடிக்கடி காளீஸ்வரியிடம் போன் பேசுவார் என்றும், அவ்வாறு பேசும்போது தான் கேட்டால் அதற்கு தன்னை அடிப்பார் என்றும், தெரிவித்துள்ளாரா என்றால் இல்லை. காளீஸ்வரிக்கும் தனது கணவருக்கும் பழக்கம் இருப்பது தெரியவந்து தான்

கேட்டபோது எதிரி தன்னை சத்தம்போட்டு கொலைமிரட்டல் விடுத்ததாகவும் அ.சா.1 என்னிடம் வாக்குமூலம் கொடுத்தார். அ.சா.,1 எனது விசாரணையின்போது 2ம் எதிரியின் புகைப்படத்தை 1ம் எதிரி அவர்களது வீட்டில் வைத்திருந்தார்கள் என்றும், அதுபற்றி கேட்டபோது 1ம் எதிரி தன்னை கன்னத்தில் அடித்துவிட்டார் என்றும், அதனால் கோபித்துக்கொண்டு அ.சா.1 அவரது அம்மாவீட்டிற்கு 5 மாதங்களுக்கு சென்றுவிட்டார் என்றும் கூறினாரா என்றால் இல்லை. வழக்கு சம்பவம் தொடர்பாக முதலில் தான் அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்ததாகவும், அங்கு எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாததால் தாலுகா காவல்நிலையத்தில் புகார்கொடுப்பதாகவும், அ.சா.1 எனது விசாரணையின் போது கூறினாரா என்றால் இல்லை. எனது விசாரணையில் தாலுகா காவல்நிலையத்தில் அ.சா.1 ஆல் கொடுக்கப்பட்ட புகார் மனுவிற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றும், அதனால் மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளரிடம் புகார் கொடுத்தார் என்றும் அ.சா.1 கூறினாரா என்றால் இல்லை. புகார்தாரர் காவல்நிலையத்தில் நேரில் ஆஜராகி கொடுத்த புகார் மனுவின் அடிப்படையில் இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அ.சா.1 எனது விசாரணையில் தனது மகன் படிக்கும் சேலம் கல்லூரியில் தன்னால் பணம் கட்ட முடியாமல் போனது என்றும், அவ்வாறு பணம் கட்ட போனதால் கல்லூரியில் சென்று இவ்வழக்கு சம்வம் பற்றி அ.சா.1 சொன்னதாகவும், அங்கு தெரிவிக்கப்பட்டதன் பேரில் இவ்வழக்கின்புகார் மனு அ.சா.1 ஆல் கொடுக்கப்பட்டது என்றும் கூறினாரா என்றால் இல்லை. அ.சா.1 எனது விசாரணையில் தனது மகன் படிக்கும் கல்லூரியில் கேட்கப்பட்டதன் பேரில் புகார் மனு கொடுக்கப்பட்டது என்று கூறினாரா என்றால் இல்லை. அ.சா.3 எனது விசாரணையில் படிப்பு சான்றிதழை தனது அப்பா தரவில்லை என்றும், தனது அண்ணனின் படிப்பு சான்றிதழை வாங்கவதற்காக தனது அம்மா போலீசிடம் புகார் கொடுத்தார் என்றும் கூறினாரா என்றால் இல்லை. எனது விசாரணையில் 1ம் எதிரி 28.02.2015ம் தேதி காலை 10.00 மணியளவில் சங்கரன்கோவில் பேருந்து நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டதாக துலங்குமா என்றால் துலங்கும். மேற்கூறிய நாள் மற்றும் நேரத்தில் சங்கரன்கோவில் பேருந்து நிலையத்தில் வைத்து 1ம் எதிரி கைது செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. இ.த.ச பிரிவு 494ன் கீழ் உள்ள குற்றத்தை விசாரிப்பதற்கு எனக்கு

எந்த அதிகாரமும் இல்லை என்றாலும், அது நீதிமன்றத்தால் விசாரிக்கப்படவேண்டியது என்றாலும் சரியல்ல. நான் முதல் விசாரணையில் கூறிய நாள்நேரத்தில் அ.சா.1 காவல்நியைத்தில் ஆஜராகி புகார்மனு எதுவும் கொடுக்கவில்லை என்றாலும் அதனடிப்படையில் வழக்கின் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை என்றாலும் சரியல்ல. புகார்தாரரால் நிலையத்தில் கொடுக்கப்பட்ட உண்மையான புகார்மனுவை விசாரணை செய்யாமல் இவ்வழக்கை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அ.சா.1 நான் முதல் விசாரணையில் கூறிய நாள் மற்றும் நேரத்தில் நிலையம் ஆஜராகி புகார்மனு கொடுக்கவில்லை என்றாலும், அவர் மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளரிடம் தான் புகார் அளித்தார் என்றாலும், மேற்படி கண்காணிப்பாளரின் நிர்பந்தத்தின் பேரில் இவ்வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. எனது விசாரணை ஒருதலைபட்சமானது என்றாலும், இவ்வழக்கிற்கும் எதிரிக்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**